தமிழ் மாசிகை

# கட்டிடத் தொழிலாளி

முரசு 2 ஒலி 1 மார்ச், 1986 விலை 50 காசுகள்

## நம் சிந்தனையிலும் செயலிலும் சிறக்கட்டும் பயிற்சிமுகாம்

மாநில சங்க செயல்வீரர்களே!


இயக்கரீதியாக இன்று ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

பல்வேறு காலகட்டங்களில் பல போராட்டங்களை நடத்தியதன் காரணமாக மாநில அரசு சட்டம் கொண்டு வந்தது. ஆனால் கட்டிடத் தொழிலுக்குப் பொருந்தவில்லை.

பொருந்தாத சட்டத்திலே மாற்றம் கோரித் தொடர்ந்து போராடி சிறைசென்றதன் காரணமாக விபத்தில் இறந்தால் ரூ. 5,000 கொடுப்பதாக அரசாணை பிறப்பித்தது அரசு. ஐயாயிரத்தை பத்தாயிரமாக்க கோரினோம். பத்தாயிரம் என ஆணை பிறப்பித்தனர். ஆனால் இதுவரை இறந்தவர் குடும்பங்களுககு நிவாரணத் தொகையை கொடுக்க வில்லை தமிழக அரசு.

நமது போராட்டங்களின் விளைவால் மத்திய அரசு சட்டம் கொண்டு வரப் போவதாக சொல்லி முத்தரப்புக் கமிட்டியை அமைத்துள்ளது. இந்தியா முழுவதும் பொருந்தக்கூடிய சட்டத்தை கட்டிடத் தொழிலாளருக்கு கொண்டுவர வேண்டுமென நமது சங்கம் புதுதில்லியில் தேசிய கருத்தரங்கம் நடத்தியது.

கட்டிடத் தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியான மிகப் பெரிய தொழில். கட்டிடத் தொழிலை நடத்துகின்ற மிகப்பெரிய நிறுவனம் (முதலாளி) அரசாங்கம்தான். நாட்டின் ஒட்டு மொத்தமான அனைத்து வளர்ச்சிப் பணியிலும் கட்டுமானமில்லாத திட்டமே இல்லை. இதை மையமாகக் கொண்டுதான் டெல்லி கருத்தரங்கம் தனது ஆய்வைத் தொடங்கியது.




கட்டிடத் தொழிலாளர்களின் தேசிய கருத்தரங்கம் புதுதில்லியில் நடைபெற்றது.

கட்டிடத் தொழிலை முறைப்படுத்துவது, கட்டிடத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பை உறுதிப்படுத்துவது, குறைந்தபட்ச உத்திரவாத முள்ள சம்பளம் அளிப்பது, சமூகப்பாதுகாப்பளிப்பது, கட்டிடத் தொழிலாளர், கட்டிடம் கட்டுவோர், ஒப்பந் தக்காரர்களைப் பதிவு செய்வது, சட்டவிரோதமான கட்டுமானப் பணிகளைத் தடுப்பது, தகராறுகளைத் தீர்த்து வைப்பது, சமூகநல நிதிகளைப் பராமரிப்பது, இப்பணிகளை சுயேச்சையான முத்தரப்பு நிறுவனத் திடம் ஒப்படைப்பது போன்ற மிகப்பயன்மிக்க சீரிய திட்டத்தினை தொகுத்தளித்தது டெல்லி கருத் தரங்கம்.

இத்தகைய வரலாறு படைக்கக் காரண மாக இருந்தவர்கள் தமிழக கட்டிடத் தொழிலாளர் கள்தான் என்பதுடன் இன்று சட்டப் பாதுகாப்பு கோரி தேசிய இயக்கத்தை நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் தலைமையில் ஏற்படுத்தியுள்ளோம்.

இந்தியாவில் வாழ்கின்ற 2 கோடிக்கு மேலான கட்டிடத் தொழிலாளர்களுக்கும் முன்னோடி யாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்ற நாம் அனைத்துத் துறையிலும் விபரம் அறிந்தவர்களாக நம்மை ஆளாக்கிக் கொள்ளத்தான் இந்தப் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. மத்திய அரசின் சட்ட அமைச்சகத்தின் சட்ட உதவி திட்டங்களை அமுல் படுத்தும் குழு (CILAS) வின் உதவியுடன் நடை பெறும்.

பயிற்சி முகாமில்

O இந்திய அரசியல் சட்டத்தின்படி கட்டிடத் தொழிலாளரின் உரிமைகள்.

O கட்டிடத் தொழிலாளரின் நிலையும், இன்று உள்ள சட்டங்கள் தரும் பாதுகாப்பும்.

O விபத்துக்கள் — காரணங்கள் — நஷ்டஈடு— தொழிலாளர் நஷ்டஈடு சட்டம்—அரசு ஆணை— விபத்து நடந்தால் செய்ய வேண்டியவை.

O கூலி—குறைந்தபட்ச கூலி—கூலித்தகராறு கள்.

O தொழிற் தகராறு சட்டம் நடைமுறைகள்.

O தொழிலை முறைப்படுத்த நாம் கோருகின்ற சட்டம்.

O கட்டிடத் தொழிலாளரும் — தொழிற் சங்கமும்.

O இன்றைய நிலையில் சங்கத்தின் பணிகள் பற்றி வழக்குரைஞர்கள், தொழிற்சங்க தலைவர்கள் கலந்து கொள்ளும் பயிற்சி முகாமில் பங்கேற்று தெளிவுபட சிந்தித்து உறுதியுடன் செயலாற்றி, நம்மையும் இயக்கத்தையும் உயர்த்திட பயிற்சி பெறுவோம்.

செயல் வீரர்களைத் தேர்வு செய்து சிந்தனை யிலும், செயலிலும் சிறக்கட்டும் பயிற்சி முகாம்.

மார்ச் 1,2 நாட்களில் மதுரை

8,9 நாட்களில் சேலம்

15,16 நாட்களில் விருதுநகர்

22, 23 நாட்களில் மயிலாடுதுறை

29, 30 நாட்களில் சென்னை ஆகிய இடங்களில்

நடைபெறும் பயிற்சிமுகாம்களில் பங்கேற்று இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு — போராட்டங் களுக்கு தயார் செய்து கொள்வோம்! வாரீர் வாரீர்!

---

## நிர்வாகிகளின் கவனத்திற்கு

சங்க உறுப்பினர்களை புதுப்பித்தலும், புதிய உப்பினர்களைச் சேர்த்தலும் இயக்கத்தின் சிறப்பிற்கான செயல் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே விரைந்து செயல்படுங்கள்.

---

உரிமை கேட்டுப் போராட உரிய நேரம் வந்தாச்சு.
ஒதுங்கி நின்னு பார்த்தாலே உனக்கல்லவா ஏச்சு.
வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் ஒருங்கிணைந்து நிற்போம்.
வள வாழ்வு வரும்போது பகிர்ந்துண்டு வாழ்வோம்!
என்பதை நினைவில் கொண்டு செயல்படுவீர்.

---

## நன்றி உரித்தாகட்டும்

மதுரை வில்லாபுரம் கிளையிலிருந்து பத்திரிகை நன்கொடையாக ரூ 201/–ம், தஞ்சை மாவட்டம் சீர்காழி கிளையின் நன்கொடை ரூ.150/–ம் வரப்பெற்றோம். தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளரின் சார்பாக நன்றியை உரித்தாக்குகிறோம்.

---

## நினைவுகொள்வோம்

மத்திய சென்னை சுதந்திர நகர் செயற்குழு நிர்வாகியாக செயலாற்றி வந்த திரு. குப்புசாமி அவர்கள் அப்போலோ மருத்துவமனையில் விபத்துக்குள்ளாகி அகால மரணமடைந்தது இயக்கத்திற்கு பெரும் இழப்பாகும். அன்னாரின் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# புதுடில்லியில் கட்டிடத் தொழிலாளர்களின் தேசிய கருத்தரங்கம்



நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் துவக்க உரையாற்றுகிறர்.

தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் தேசிய கருத்தரங்கம் 1985 நவம்பர் 1, 2, 3, தேதிகளில் புதுதில்லி காந்தி சமாதான அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

## வரலாற்று முக்கியத்துவம்

கட்டிடத் தொழிலாளர் இயக்க வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது இக்கருத்தரங்கம்.

கட்டிடத் தொழிலாளருக்கு முறையான சட்டப் பாதுகாப்பு கோரி பல ஆண்டுகளாக தமிழ் நாடு அளவில் போராடி வந்திருக்கிறேம். தமிழக அரசு கட்டிடத் தொழிலுக்கு பொருந்தாத வகையில் சட்டம் கொண்டு வந்தது. கட்டிடத் தொழிலாளர்களின் உணர்வுகளை மதிக்கவும் தயாராக இல்லை நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்களின் தலைமையிலான குழு சட்ட மாற்றத்துக்காக இயற்றிய பரிந்துரைகளையும் ஏற்கவில்லை.

மத்திய அரசு கடந்த பல ஆண்டுகளாக கட்டிடத் தொழிலாளர்களுக்கென சட்டம் கொண்டு வரப் போவதாக சொல்லி வந்தது. சென்ற ஆண்டு கட்டிடத் தொழிலாளருக்கு சமூகப் பாதுகாப்பு உருவாக்குவதற்காக —அரசு— முதலாளிகள்— தொழிற்சங்க பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்பு கமிட்டியை ஏற்படுத்தியது. அதில் தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திருமதி கீதா உறுப்பினராக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருவதும் அனைவருக்கும் தெரிந்ததே.

மத்திய அரசு கட்டிடத் தொழிலாளருக்கு சட்டம் கொண்டு வருவதற்கும், தொழிலாளர்களுக்கு உண்மையான பாதுகாப்பை தருகின்ற வகையில் சட்டம் அமைந்திட வேண்டும் என்பதற்கும் அகில இந்திய ரீதியில் குரல்கொடுப்பது இயக்கத்தின் தேவை என்ற அடிப்படையில் தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கம் இக்கருத்தரங்கை புதுதில்லியில் ஏற்பாடு செய்தது.

பல்வேறு மாநிலங்களிலிருந்து கட்டிடத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள், முதலாளிகள் தரப்பின் நிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

பல மொழிகள் பேசும் கட்டிடத் தொழிலாளர்கள் மொழி பிரச்சனையின்றி ஒருவர் பேசியதை மற்றவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் மொழியாக்கம் செய்யப்பட்டது. இந்தியாவில் உள்ள கட்டிடத் தொழிலாளர்கள் ஓரணியில் நின்று குரல் கொடுப்பதென உணர்வுபூர்வமாக முடிவெடுக்கப்பட்டு சட்டப்பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தை உருவாக்கி அகில இந்திய அளவில் கட்டிடத் தொழிலாளர் ஒற்றுமைக்கு வழிகோலியது இக்கருத்தரங்கின் வரலாற்று சிறப்பாகும்.

அதே நேரத்தில் கட்டிடத் தொழிலாளி கட்டிடம் எழுப்பும் முன் கற்பனையில் அதை உருவாக்கி செய்து காட்டும் திறம்படைத்தவர் என்பதை போல தொழிலாளருக்கு தேவையான



கருத்தரங்கில் இ. எஸ். ஐ. கமிஷனர் திரு. நய்யார், தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் முதலாளி தரப்பு பிரதிநிதி திரு. குகாதாக் கூர்த்தா.

பாதுகாப்பு சட்டம் எப்படி அமைந்திட வேண்டும் என்பதை குழுக்களாக பிரிந்து அலசி ஆராய்ந்து அகில இந்திய அளவில் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்து சட்டவடிவிற்கு வழிகோலியது இக்கருத்தரங்கின் தனிச் சிறப்பாகும்.

## கருத்தரங்க ஏற்பாடுகள்:

தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் கருத்தரங்கம் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி திரு. பி. என். பகவதி அவர்களின் தலைமையிலான சட்ட உதவி திட்டங்களை அமுல்படுத்தும் குழு (CILAS), புதுதில்லி கரோல் பாக்கிலுள்ள சட்டஉதவி மற்றும் ஆலோசனை அலுவலகம், கர்நாடக மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கம், பெங்களூரை சேர்ந்த திருமதி. அனிதாரெட்டி, புதுதில்லியிலுள்ள ஆசிய ஆராய்ச்சி நிறுவனம் ஆகியோரின் உதவியுடன் நடைபெற்றது.

பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்த பிரதிநிதிகள் தங்குவதற்கான ஏற்பாடுகளை தில்லி கட்டிடத் தொழிலாளர் சங்க செயலாளர் திரு. மோகன்லால் செய்திருந்தார்.

## கருத்தரங்க பிரதிநிதிகள்:

புதுதில்லியில் நடந்த தேசிய கருத்தரங்கில் தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் திண்டுக்கல் V. பிச்சைமுத்து மற்றும் மாநில நிர்வாகிகளும் வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை, வடஆற்காடு தென்ஆற்காடு, சேலம், தஞ்சை, மதுரை, அண்ணா, முத்துராமலிங்கனார், காமராஜர், மற்றும் நெல்லை ஆகிய மாவட்டங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். கர்நாடக மாநிலத்திலிருந்து கர்நாடக மாநில கட்டிடத் தொழிலாளர் சங்க அமைப்பாளர் திரு. சாமி, பொதுச்செயலாளர் திரு. பெரோஸ் அகமது மற்றும் பிரதிநிதிகள், புதுதில்லியிலிருந்து CPWD(சி. பி. டபில்யூ. டி) தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய பொதுச்செயலாளர் திரு. மன்னா, தில்லி நகர கட்டிடத் தொழிலாளர் சங்க செயலாளர் திரு. மோகன்லால், தில்லி பெருநகர் தலித் கட்டிடத் தொழிலாளர் சங்க செயலாளர் திரு. பாபுலால்பாகிடே, ஹரியானா மாநில முன்னாள் அமைச்சரும், ஹரியானா- உத்திரபிரதேச மாநிலங்களின் கட்டிடத் தொழிலாளர் இயக்க தலைவரான சுவாமி அக்னிவேஷ் மற்றும் பிரதிநிதிகள், பஞ்சாப் மாநில நங்கல் பிரதேச கட்டிடத் தொழிலாளர் சங்க தலைவர் திரு. மெகங்காராம், இந்திய கட்டிட மற்றும் மரத்தொழிலாளர்கள் சங்கத்தின் ஜலந்தர் பகுதி செயலாளர் திரு ஜெய்சிங் மற்றும் மகாராஷ்ராவிலிருந்து பிரதிநிதிகள், பம்பாயிலிருந்து தொழிற்சங்கத்தின் தலைவர் திரு. தங்கப்பன் முதலியோர் கலந்து கொண்டனர். தொழிலாளர் தரப்பில் இந்திய அளவில் 160க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முதலாளிகள் சங்க தரப்பு பிரதிநிதியாக கேனன்டன்கர்லி நிறுவனத்தின் டைரக்டர் திரு. குகாடகுர்த்தா கலந்து கொண்டார். மத்திய அரசின் முன்னாள் தொழிலாளர்துறை கூடுதல் செயலாளர் திரு. டி. எஸ். சங்கரன் அவர்களும் இ. எஸ். ஐ. கமிஷனர் திரு நய்யார் அவர்களும் மற்றும் வழக்கறிஞர்கள் திரு. பி. ரத்தினம், திரு. எம். எஸ். கணேஷ், திரு. கீர்த்திசிங், ஆசிய ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு. ராஜேஷ் டன்டன், திரு. ராஜேஷ் பாண்டே புதுதில்லி சட்டஉதவி மற்றும் ஆலோசனை

அலுவலகத்தை சேர்ந்த திருமதி. விஜயா, திரு. சந்திரமோகன் வழக்கறிஞர்கள் திருமதி. சித்ரா, திரு. சர்மா மற்றும் திரு சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டு பெருமளவில் உதவினர்.

இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக தில்லி சுப்ரீம்கோர்ட் வழக்கறிஞர் திரு. ஆர். வெங்கட்ரமணி அவர்கள் முன்னின்று செயல்பட்டார்.

இக்கருத்தரங்கை வழிகாட்டி குழு விவாதங்களை முறைபடுத்தி தொழிலாளர்களில் ஒருவராகவே கலந்து பேசி தீர்மானமான ஒருங்கிணைப்பிற்கு திரு. டி. எஸ். சங்கரன் அவர்கள் செயல்பட்டதை யாராலும் மறக்க முடியாது.

## முதல் நாள் காலை நிகழ்ச்சி:

கருத்தரங்கின் முதல்நாளான 1985 நவம்பர் 1 ஆம் தேதி காலை பத்துமணிக்கு பல்வேறு மாநிலங்களிலிருந்து பிரதிநிதிகள் புதுதில்லி காந்தி சமாதான நிறுவனத்தில் கூடினர். பதிவிற்கு பிறகு காலை நிகழ்ச்சி தொடங்கியது. வழக்கறிஞர் வெங்கட்ரமணி அனைவரையும் வரவேற்று கருத்தரங்கத்தின் நோக்கத்தை விளக்கிக் கூறினார். நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் துவக்க உரையாற்றினர். பின்னர் அவரின் கருத்துக்கள் இந்தியிலும், தமிழிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது.

முதல்நாள் மதிய நிகழ்ச்சியில் பல்வேறு மாநிலங்களின் இயக்க அநுபவங்களும் சட்டரீதியான பிரச்சனைகளும் பற்றி


1. தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கமாநில தலைவர் திண்டுக்கல் பிச்சைமுத்து
2. உத்திரபிரதேசம் மற்றும் ஹரியானா மாநிலங்களின் அநுபவங்கள் குறித்து சுவாமி அக்னிவேஷ்.
3. கர்நாடக மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் திரு. பெரோஸ் அகமத் மற்றும் திரு மோகன் அவர்களும்.
4. தில்லி மாநகர கட்டிடத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் திரு. மோகன்லால்.
5. பஞ்சாப் மாநிலம் நங்கல் பிரதேச கட்டிடத் தொழிலாளர் சங்க தலைவர் திரு. மெகங்காராம்.
6. ஜலந்தர் கட்டிடத் தொழிலாளர் சங்க செயலாளர் திரு. ஜெய்சிங்.
7. தமிழ்நாடு மாநில கட்டிடத் தொழிலாளர் சங்க பொதுசெயலாளர் சே. மா. ரங்காமி ஆகியோரும் பேசினர்.
8. ஆந்திர பிரதேச கட்டிடத் தொழிலாளர் சங்கம். ராஜஸ்தான் கட்டிடத் தொழிலாளர் சங்கம் மற்றும் கேரள கட்டிடத் தொழிலாளர் சங்கங்கள் கொடுத்த இயக்க அனுபவங்களை குறித்து கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. அவர்கள் இயக்க அனுபவங்களை கூறும்போதே ஒருங்கிணைப்பின் தேவைகளை பற்றி தெளிவாகவே விவரித்திருந்தனர்.

## முதல் நாள் மாலை நிகழ்ச்சி

முதல் நாள் மாலை நிகழ்ச்சியில் கட்டிடத் தொழிலின் நிலைமைகள்-தொழிலை முறைப்படுத்துதல் பற்றி மூவர் பேசினர். கட்டுவோர் சங்கத்தின் சார்பில் பாதுகாப்பு குறித்த மத்திய அரசு கமிட்டியின் உறுப்பினராக விளங்கும் திரு. குஹாதாகுர்தா (கானன் டன்கர்லி நிறுவனத்தின் மேலாளர்) முதலில் பேசினர். தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் வெளியே விற்பனைக்கு செல்கிறது. தொழிலாளர்கள் ஓரிடத்தில் பணியாற்று



கருத்தரங்கில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் ஒரு பகுதி.









கின்றனர். ஆனால், கட்டிடத் தொழிலில் உழைப்பின் பலனை கட்டிடம் நிலையாக இருக்கும். தொழிலாளர்கள் வேறிடத்திற்கு வேலைக்கு செல்கின்றனர். ஆதலால் தொழிற்சாலைகளுக்கு போடப்பட்ட சட்டங்கள் கட்டிடத் தொழிலுக்கு பொருந்தாது. பிராவிடண்ட் பண்ட் இஎஸ்ஐ ஆகிய சட்டங்களினால் தொழிலாளிக்கு பயனில்லை. பெறும் குறைவான வருமானத்தில் பிடித்தம் செய்வதால் தொழிலாளிக்கு பலனில்லை. பல்வேறு சட்டங்கள் இருப்பதால் முதலாளிகளுக்கும் கஷ்டம். அதனால்ஒரே சட்டமாகவும் பொருந்தக்கூடியதாகவும் தொழிலாளிக்கு பாதுகாப்பு கொடுக்கக் கூடியதாகவும் இயற்ற வேண்டியது மத்திய அரசின் கடமை'' எனப் பேசினார்.

பம்பாயிலுள்ள கட்டிட மேனேஜ்மெண்ட் ஆராய்ச்சி நிறுவனத்தின் மேலாளரும் அரசின் முத்தரப்பு கமிட்டி உறுப்பினருமான **பேராசிரியர் கே. என். வயத்** அனுப்பிய கட்டிடத் தொழிலில் உள்ள முதலீடுகள், தொழிலின் முக்கியத்துவம் தொழிற்சங்க இயக்கத்தின் கடமைகள் பற்றிய விரிவான கட்டுரை படிக்கப்பட்டது.

அடுத்து தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில மகளிர் அணி செயலர் கீதா துறைமுகங்களில் அரசு—முதலாளி—தொழிலாளி முத்தரப்பு நிறுவனங்களின் வாயிலாக துறைமுகத் தொழிலாளிக்கு உத்திரவாதமான சம்பளம் ஆகியவை கிடைத்துள்ளன. கட்டிடத் தொழிலில் உத்திரவாதமற்ற நிலையைப் போக்க முத்தரப்பு நிறுவனங்களை ஏற்படுத்தி அவற்றின் வாயிலாக வேலைவாய்ப்பை முறைப்படுத்தினால்தான் தொழிலாளி பாதுகாப்பு பெற முடியும். தொழிலை முறைப்படுத்தாமல் கட்டிடத் தொழிலாளருக்காக போடப்படும் எந்த சட்டமும் திட்டமும் பயன்படாது என குறிப்பிட்டார்.

முன்னாள் கூடுதல் செயலாளராக மத்திய அரசு தொழிலாளர்துறையில் விளங்கியதிரு டி.எஸ். சங்கரன் அவர்கள் ''கட்டிடத் தொழிலில் பெரிய முதலாளியாக இருப்பது அரசு. ஆதலால் கட்டிடத் தொழிலை முறைப்படுத்தி பதிவு செய்யப்பட்ட கட்டத்தில்தான் வேலை நடத்தலாம்-நிறுவனத்தின் மூலம் தான் தொழிலாளியை வேலைக்கு அமர்த்த முடியும் என்ற நிலை உருவாக வேண்டும். துறைமுகங்களில் சாத்தியமானது போல, கட்டிடத் தொழிலிலும் சாத்தியம்'' என விளக்கமாகப் பேசினார்.

கருத்தரங்கத்தில் பங்கு பெற்றவர்கள் ஆறு குழுக்களாக பிரிக்கப்பட்டனர்.

## இரண்டாம் நாள் காலை

இரண்டாம் நாள் கருத்தரங்கத்தில் காலையில் முன்னாள் குஜராத் மாநில தலைமை நீதிபதி திரு. **பி.எஸ்.போத்தி** அவர்கள் கட்டிடத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு சட்டம் இயற்ற வேண்டியதன் அவசியத்தை விளக்கிப் பேசினார்.

இஎஸ்ஐ கமிஷனர் திரு **நய்யார்** அவர்கள் இ எஸ் ஐ திட்டத்தினால் மருத்துவ வசதி, உடல் நலமில்லாத நாட்களுக்கு பாதிசம்பளம், விபத்து காலத்தில் முழுசம்பளம், மகப்பேறு காலத்தில் மூன்று மாதங்களுக்கு முழுசம்பளம், ஆகியவை பெற வாய்ப்புண்டு ஆனால் இப்பொழுதுள்ள இஎஸ்ஐ சட்டப்படி தொழிலாளர்கள் செலுத்த வேண்டிய பங்கை முதலாளி மூலம் செலுத்தி முதலாளி அது

போல் இருபங்கு செலுத்தவேண்டும். ஒரே முதலாளியோ தொழிலிடமோ இல்லாத கட்டிடத் தொழிலில் இத்தகையை சட்டத்தை அமுல்படுத்த முடியாது. ஒரு நிறுவனத்தை அமைத்து அதன்மூலம் தொழிலாளிகள் வேலை வாய்ப்பு பெற்றால் நிறுவனமே முதலாளியிடமிருந்து பங்கைப் பெற்று மருத்துவ காப்பீட்டை அமுல்படுத்த முடியும்'' என்று விளக்கிப் பேசினர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த தொழிலாளர் பிரதிநிதிகள் இஎஸ்ஐ திட்டத்தைப்பற்றி பல்வேறு வினாக்களை எழுப்பி சந்தேகங்களை நிவர்த்தி செய்தனர்.

பிறகு குழு விவாதங்கள் தொடர்ந்தன. கட்டிடத் தொழிலை முறைப்படுத்த நிறுவனத்தின் தேவை—அதன் அமைப்பு—செயல்பாடுகள் குறித்து ஆறு குழுக்களும் விவாதித்து தமது பரிந்துரைகளை உருவாக்கினர். தவிர.

1. வேலை நிலைமைகளும் பணிப்பாதுகாப்பும்.
2. விபத்துக்கள்—பாதுகாப்பும் நிவாரணமும்.
3. சமூகப் பாதுகாப்பு—இஎஸ்ஐ பிராவிடண்ட் பண்ட் பென்ஷன்.
4. நல்வாழ்வு—வீட்டுவசதி, குழந்தைகள் கல்வி, குழந்தைகள் காப்பகம்.
5. சம்பளமும் குறைந்தபட்ச கூலியும்.
6. பெண் தொழிலாளர்களின் தனிப்பிரச்னைகள்

ஆகியஆறு தலைப்புகளில் குழுக்கள் ஆலோசனை செய்து பரிந்துரைகளை உருவாக்கின. திரு. தங்கப்பன், திரு. பால்ராஜ், வழக்குரைஞர் R. வெங்கட்ரமணி, திரு டி எஸ் சங்கரன், திண்டுக்கல் வி. பிச்சைமுத்து, வழக்கறிஞர் கீர்த்தி—சம்பா ஆகியோர் குழுக்களில் விவாதங்களை முன்னின்று நடத்தினர்.

## மூன்ரும் நாள் காலை

மூன்ரும் நாள் காலையில் பொதுவரங்கம் திரு டி எஸ் சங்கரன் தலைமையில் நடைபெற்றது.

கட்டிடத் தொழிலை முறைப்படுத்த முத்தரப்பு நிறுவனம் தேவை என்று எல்லா குழுக்களும் ஏகமனதாக முடிவெடுத்தன. நிறுவனத்தில் தொழிலாளர்—அரசு—முதலாளி தரப்பில் விகிதாசாரம் எவ்வாறு அமைய வேண்டும்என்பதில் குழுவிற்கு குழு வேறுபட்ட கருத்து நிலவியது. நிறுவனத்தின் செயல்முறைகள் பற்றி ஒருமனதாக தீர்மானங்கள் இயற்றப்பட்டன. நிறுவனத்தின் அமைப்பு பற்றிய தீர்மானம் பிரதிநிதி குழுவிற்கு விடப்பட்டது.

தொழிலின் பல்வேறு பிரச்னைகள் பற்றிய குழு அறிக்கைகள் படிக்கப்பட்டன. விவாதத்திற்கு பிறகு ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## மதிய நிகழ்ச்சி

மூன்ரும் நாள் மதியம் அகில இந்திய ரீதியாக ஒரு சட்டத்திற்கான கோரிக்கையை வலியுறுத்த தேசிய அளவில் இயக்கம் உருவாக்க வேண்டியதன் தேவை பற்றி விவாதித்து தீர்மானிக்கப்பட்டது. தேசிய இயக்கத்திற்கு நீதிபதி வீ. ஆர். கிருஷ்ணய்யர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பல்வேறு மாநில தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் திரு டி எஸ் சங்கரன் நீதிபதி திரு பி எஸ் போத்தி ஆகியோரும் வழக்குரைஞர்கள் திரு R. வெங்கட்ரமணி திரு எம் எஸ் கணேஷ், திரு கீர்த்தி, திருமதி விஜயா ஆகியோர் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேசிய இயக்கத்தை வாழ்த்தியும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் திரு தங்கப்பன், திரு ஏ என் பாலு, சேலம் மாவட்ட கட்டிடத் தொழிலாளர் சங்க செயலர். சுவாமி அக்னிவேஷ் மற்றும் தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்க பொதுச் செயலர் எம் சுப்பு ஆகியோர் பேசினர்.

திரு சுரேந்திர மோகன் எம் பி அவர்கள் கருத்தரங்கின் முடிப்புரை ஆற்றினர்.

கருத்தரங்கின் அமைப்பாளர் திரு R. வெங்கட்ரமணி நன்றி கூறினார்.



கருத்தரங்கில் பங்கு கொண்ட பெண்களில் ஒரு பகுதியினர்.

# மத்திய அரசு தொழிலாளர் துறை அமைச்சரிடம் தேசிய இயக்கம் கொடுத்த மனு

மாண்புமிகு அமைச்சருக்கு,

கட்டிடத் தொழில், விவசாயத்திற்கு அடுத்த படியாக நாட்டின் மிகப்பெரிய பொருளாதார நட வடிக்கையாகும். இதில் சுமார் 2 கோடி மக்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இத்தொழிலை சீர்படுத்தி கட்டிடத் தொழிலாளருக்கு முறையாக வேலையளிக் கவோ, கட்டுமானப் பணியை முறைப்படுத்தி சுரண் டப்படும் தொழிலாளருக்கு உரிய பாதுகாப்பளிக் கவோ எந்தவிதமான சட்டமும் இல்லை சமூகப் பாதுகாப்போ சமூகநலத் திட்டமோ இல்லை.

நம்நாட்டு தொழிலாளர்களில் பரிதாபகர மான நிலையில் இருப்பவர்கள் கட்டிடத் தொழிலாளர் தாம். இவர்களுடைய உழைப்பினால்தான் நாட்டின் வளர்ச்சிப் பணிகள் சாத்தியமாகிறது. தமது வாழ்க் கையைப் பாதுகாத்திட அரசின் நடவடிக்கை கோரி போராடி வருகின்றனர். 1981-ல் தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் முயற்சியினால் தனி நபர் மசோதா அறிமுகப்படுத்த முயற்சி செய்த போது, அரசு சட்டம் இயற்ற உறுதியளித்தது.

தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங் கமோ தனது போராட்டங்களை தீவிரமாக்கியது. 1984-ல் மாநில அரசு மசோதாவை அறிமுகப்படுத் தியது. ஜனாதிபதியின் ஒப்புதலுக்காகக் காத்திருக் கிறது. இந்த மசோதாவில் குறைபாடுகள் அதிகம் கட்டிடத் தொழிலில் முதலாளி தொழிலாளருக் கிடையே உள்ள மாறுபடும் உறவு, கட்டிடத் தொழிலை முறைப்படுத்தும் சட்டத்தின் தேவை தொழிலாளருக்கு சமூகப்பாதுகாப்புக்கான தேவை ஆகியவற்றை கருத்தில் கொள்ளவில்லை. இந்த மசோதா தொழிலாளருக்கு பயனளிக்காது.

மத்திய அரசின் உடனடி நடவடிக்கை தேவை என்பதையும், கட்டிடத்தொழில் பற்றி முத் தரப்பு கமிட்டி அமைத்ததையும் கருத்தில் கொண்டு, இதுபற்றி கருத்துக்களைத் திரட்டி அரசிற்கு வரைவு மசோதா வடிவில் கொடுப்பது என கருதினோம், இத்துறையில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பும், நடவடிக்கையும், அரசிற்கு உண்டு என்பது பற்றி சந்தேகமில்லை. அவலநிலையி லுள்ள தொழிலாளரின் கண்ணீரைத் துடைப்பது தான் சோசலிச செயலாக முடியும்.

நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து பல அமைப்புகளைச் சேர்ந்த பெருவாரியான பங்கு பெற்ற மூன்றுநாள் கருத்தரங்கு புதுமையான அனுபவ மாகும். கட்டிடத் தொழிலாளர்களே தமக்கு நன்மை யளிக்கும் ஒரு சட்டத்தின் வடிவையும், உட்பொருளை



கருத்தரங்கின் முடிவுகள் அடங்கிய மனுவை திரு. T. S. சங்கரன் அவர்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சரிடம் கொடுக்கிறார்,



தொழிலாளர் நலத்துறை அமைச்சருடன் கருத்தரங்கில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் ஒரு பகுதியினர்

யும் விவாதிப்பதில் பங்கேற்றனர். இந்த முயற்சி பயனுள்ளதாகவும், நம்பிக்கை யூட்டுவதாகவும் அமைந்தது. சில வலுவான ஆலோசனைகள் ஏகமனதாக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

மாதிரி மசோதாவை தயாரிக்கவும் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய ஆதரவு தேடவும் நீதிபதி வீ. ஆர். கிருஷ்ணய்யர் தலைமையில் தேசீய இயக்கம் அமைக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலுள்ள கட்டிடத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தவிர குஜராத் மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. பி. எஸ். போத்தி, மத்திய அரசின், ஒய்வு பெற்ற தொழிலாளர் துறை கூடுதல் செயலாளர் திரு. டி. எஸ். சங்கரன் மற்றும் வழக்குரைஞர்கள் உறுப்பினர்கள் ஆவர்.

கருத்தரங்கின் பரிந்துரைகளின் சுருக்கம் பின்வருமாறு:

(அ) கட்டிடத்தொழிலாளரின் வேலைவாய்ப்பு மற்றும் கட்டிடத் தொழிலை முறைப்படுத்தவும், குறைந்தபட்ச உத்திரவாதமுள்ள சம்பளம் மற்றும் சமூகநலப் பாதுகாப்பு அளிக்கவும் மத்திய அரசின் சட்டம் தேவை.

(ஆ) கட்டிடத் தொழிலை முறைப்படுத்தி சமூகநலம் மற்றும் சமூகப் பாதுகாப்பு தரும் பணிகளை சுயேச்சையான முத்தரப்பு நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

(இ) கட்டிடத் தொழிலாளர்கள்' கட்டிடம் கட்டுவோர் மற்றும் காண்டிராக்டர்களை பதிவு செய்வதன் மூலம் தொழிலை முறைப்படுத்த வேண்டும். சட்டத்திற்கு புறம்பான கட்டுமானப் பணிகள் அனுமதிக்கப்படாது.

(ஈ) மேற்கூறிய அமைப்பு சம்பள நிர்ணயம், சமூக பாதுகாப்பு மற்றும் சமூகநல நிதிகளைப் பராமரித்தல் மற்றும் உடனடி தகராறுகளை தீர்ப்பது போன்ற அதிகாரங்களைப் பெற வேண்டும்.

மாதிரி மசோதாவைத் தயாரிக்கும் பணியில் தேசிய இயக்கம் ஈடுபட்டுள்ளது. தயாரித்து அரசிற்கு அளித்தபின் அதை ஏற்றுசட்டத்தை அமுலாக்க மத்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அரசு அக்கறையுடன் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் மக்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான நீதி வழங்க அரசியல் சட்டத்தின் அணிந்துரை வாயிலாக அளித்துள்ள உறுதிமொழியை செயலாக்குவதில் ஒரு படியாக அமையும்.

வி. ஆர். கிருஷ்ணய்யர்
தலைவர்
கட்டிடத் தொழிலாளருக்கு சட்டப் பாதுகாப்பு கோரி தேசிய இயக்கம்.

---

## நன்றி! நன்றி!

இந்தியாவின் தலைநகர் டெல்லியிலே நடந்த தேசிய கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைத்து மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் வழக்குரைஞர்களுக்கும் சட்ட உதவி கழகத்தைச் சார்ந்த பணியாளர்களுக்கும் கருத்தரங்கம் சீரும் சிறப்பாக நடைபெற அனைத்து உதவிகளும் செய்த நல்ல உள்ளங்களுக்கும் தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கம் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

# தொழிலாளர் துறை அமைச்சர்

# மற்றும்

# அதிகாரிகளுடன் விவாதம்




கட்டிடத் தொழிலாளர் தேசிய இயக்கத்தின் சார்பில் பலவேறு மாநிலங்களைச் சேர்ந்த 50 தொழிற் சங்கப் பிரதிநிதிகள் திரு டி. எஸ் சங்கரன் தலைமையில் மத்திய தொழிலாளர்துறை அமைச்சர் டி. அஞ்சையா மற்றும் தொழிலாளர்துறை அதிகாரிகளை 6.11.85 அன்று ச்ரம் சக்தி பவனில் சந்தித்து விவா ,த்தனர். தொழிலாளர்துறை கூடுதல் செயலாளர் திருமதி மீரா சேத், தொழிலாளர்துறை தலைமை இயக்குனர் திரு ஏ. கே. சிரிவாஸ்தவா, இ:எஸ்:ஐ. தலைமை இயக்குநர் திரு பி.எஸ்.ராமசாமி பிராவிடண்ட் பண்ட் கமிஷனர் ஆகியோர் விவாதத்தில் பங்கேற்றனர். விவாதம் ஒருமணி நேரம் நடைபெற்றது.



ஒரு விரிவான தகுந்த சட்டம்தான் நமது கடுமையான சூழ்நிலையை மாற்றி தேவைகளை பூர்த்தி செய்ய முடியுமென தொழிலாளர் பிரதிநிதிகள் அமைச்சரிடம் வலியுறுத்தினர். தேசிய இயக்கத்தின் சார்பில் நீதிபதி வீ. ஆர். கிருஷ்ணய்யர் கையெழுத்திட்ட மனுவை திரு டி. எஸ். சங்கரன் அமைச்சரிடம் கொடுத்தார்.




கட்டிடத் தொழிலில் பெரிய அளவு ஈடுபட்டிருக்கும் மத்திய அரசிற்கு தொழிலாளரை பாதுகாக்கும் பொறுப்புண்டு என திரு டி. எஸ். சங்கரன் வலியுறுத்தினார். மேலும் மத்திய ஆட்சியில் பல்வேறு அரசாங்கங்கள் சட்டம் இயற்றுவதாக வாக்களித்தும் இதுநாள் வரை ஒன்றும் செயலாக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. தமிழ் நாட்டில் கட்டிடத் தொழிலாளருக்கு தகுந்த சட்டமியற்றக் கோரியும், முற்றிலும் அதிருப்திகரமான மசோதா சட்டமான கசப்பான அனுபவத்தை தேசிய முத்தரப்பு கமிட்டி உறுப்பினராக விளங்கும் திருமதி கீதா குறிப்பிட்டார்.



தொழிலாளர்துறை அமைச்சர் கட்டிடத் தொழிலாளர்கள் மிகவும் சுரண்டப்பட்ட நிலையில் உள்ளதையும் சட்டபாதுகாப்புதர விரிவான சட்டத்தின் தேவையையும் ஒப்புக் கொண்டார். தொழிலாளர்துறை அதிகாரிகள் முத்தரப்பு கமிட்டியின் முடிவின் அடிப்படையில் சட்டமியற்ற முடியும் எனக் கூறினர். அமைச்சர் முத்தரப்பு கமிட்டியின் பரிசீலனை துரிதமாக்கப்படலாம் என்றும் தொழிலாளர் பயனடைவதற்கான நடைமுறைப் பிரச்னைகளில் உடனடி கவனம் செலுத்தவேண்டும் என்றும் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது சட்டம் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறினர்.



(இடமிருந்து வலமாக) பிராவிடண்ட் பண்ட் கமிஷனர், மத்திய அரசின் முன்னாள் கூடுதல் செயலர் திரு. T. S, சங்கரன், அரியானா மாநில முன்னாள் அமைச்சர் சுவாமி அக்னிவேஷ் மற்றும் சி.பி.டபிள்யூ.டி. யூனியனின் அகில இந்திய செயலாளர் திரு. மன்னா ஆகியோர்.



கருத்தரங்க பிரதிநிதிகளுடன் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

## தேசிய இயக்கத்தின் முதல் கூட்டம்

கட்டிடத் தொழிலாளருக்கு சட்டப் பாதுகாப்பு கோரும் தேசிய இயக்கத்தின் முதல் கூட்டம் 5-1-85 அன்று நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் தலைமையில் புதுதில்லியில் கூடியது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. கருத்தரங்கில் ஏற்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப மாதிரி மசோதாவை உருவாக்குதல்.

2. மாதிரி மசோதாவை சட்டமாக்க கோரி அகில இந்திய அளவில் இயக்கம் ஏற்படுத்துவது. கட்டிடத் தொழிலாளர் அமைப்புகளின் போராட்டங்களும் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தலும் இதில் அடங்கும்.

3. மாநிலங்களில் இயக்கத்தை ஏற்படுத்தி கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம் சமுதாயத்தின் பல்வேறு பகுதியினரிடமிருந்து ஆதரவு திரட்டுதல்.

4. பாராளுமன்றம் மாதிரி மசோதாவை ஏற்று சட்டமியற்ற வேண்டும் என வலியுறுத்தி அகில இந்திய அளவில் கட்டிடத் தொழிலாளர்கள் கையெழுத்திட்ட மனுவை பாராளுமன்றத்திற்கு கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# கட்டிட தொழிலாளருக்கு ஒரு விரிவான சட்டத்திற்கான பரிந்துரை

கருத்தரங்கில் பங்கு பெற்றோர் கட்டிடத் தொழிலாளரைப் பாதுகாக்க ஒரு சட்டத்தை மத்திய அரசு இயற்ற வேண்டும் என ஏகமனதாக கருதினர். வேலை வாய்ப்பையும் தொழிலையும் முறைப்படுத்துவது சட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். வேலைப் பாதுகாப்பு, குறைந்தபட்ச உத்திரவாதமுள்ள சம்பளம் மற்றும் சமூகநல, சமூக பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

கட்டிடத் தொழில் முத்தரப்பு நிறுவனம் ஒவ்வொரு மாநிலத்திலும் நிறுவப்பட்டு, ஒருங்கிணைப்பதற்கு அகில இந்திய அளவில் நிறுவனம் அமைய வேண்டும்.

கட்டிடத் தொழிலாளர்— அரசு— காண்டிராக்டர்கள் ஆகியோருக்கு விகிதப்படி பிரதிநிதித்துவம் 50: 30: 20 என்ற வகையில் அமைய வேண்டும். தொழிலாளரின் ஒப்புதலின்றி அவர்களை பாதிக்கும் எந்த முடிவும் எடுக்கப்படக்கூடாது. கட்டிடத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள், பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களால் ரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். பிரதிநிதித்துவத்தை ரத்து செய்யும் உரிமையும் தொழிலாளரிடம் இருக்க வேண்டும்.

நிறுவனத்தின் பணிகள்:

1. கட்டிடத் தொழிலாளர்களை பதிவு செய்தல்.
2. கட்டுமானப் பணி மேற் கொள்வதற்கு முன் சொந்தக்காரருக்கு அனுமதி வழங்கல்
3. பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களை குழுக்களாக பிரித்து, முறைவைத்து- வேலைகளில் அமர்த்துவது
4. கட்டுமான சொந்தக்காரரிடமிருந்து அனுமதி வழங்குமுன் கட்டுமான செலவில் .2 சதவிகிதம் பிடித்தம் செய்து நல்வாழ்வு நிதியை அமைத்தல்.
5. வேலைகளுக்கான சம்பளத்தையும் தகுந்த லெவியையும், சொந்தக்காரர் அல்லது காண்டிராக்டரிடம் வசூலித்தல்.
6. தொழிலாளருக்கு குறைந்தபட்ச சம்பளத்தை உத்திரவாதம் செய்வது
7. சமூக பாதுகாப்பிற்கான பிராவிடண்ட்பண்ட் மற்றும் மருத்துவ காப்பீடு அமுல்படுத்துவது.
8. வீட்டு வசதி, குழந்தைகள் காப்பகம், குழந்தைகள் கல்வி மற்றும் தொழிற் கல்விக்கான வாய்ப்பு ஏற்படுத்துவது
9. மாவட்டங்களுக்கிடையிலும் மற்றும் மாநிலங்களுக்கிடையிலும் இடம்மாறி பணி செய்வதை முறைப்படுத்துவது.
10. நிறுவனத்தின் அனுமதியின்றி எந்த நிறுவனமோ தனிநபரோ கட்டுமானப் பணியை மேற்கொள்ளக்கூடாது
11. பதிவு செய்யப்பட்ட கட்டிடத் தொழிலாளர் மட்டுமே வேலைவாய்ப்புப் பெற வகை செய்வது
12. சட்டத்திற்கு புறம்பாக கட்டுமானப் பணி நடைபெறுமல் தடுப்பது.
13. சட்டரீதியான கடமைகளை நிறைவேற்றத் தவறினால் நிறுவனம் உடனடியாக தலையிட்டு தீர்ப்பளித்தல்
14. நிறுவனம் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாகவும் அமைக்க வகை செய்தல்







கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதிகளும், முக்கிய பிரமுகர்களும்.

# ராணுவ அதிகாரிகளுக்காக
# உயிர்தியாகம் செய்த கட்டிடத் தொழிலாளர்கள்

## நேரில் பார்த்து அனுபவித்த உண்மை சம்பவம்

நீலகிரி மலே. ஒருகாலத்தில் ஆள் நடமாடுவதற்குப் பயப்படும் காடாக இருந்த இடம் இன்று அழகுமிளிரும் மூன்றடுக்கு மாடிகள் கொண்ட கூர்க்கா ஹில்ஸ்' மலேயாக உருவெடுக்கக் காரணமானவர்கள் ஒருவேளே சோற்றுக்கே வழியில்லாத கட்டிடத் தொழிலாளர்கள். அவர்களில் பெரும் பகுதியினர் அருகிலுள்ள பாபுகிராமத்தைச் சார்ந்தவர்கள். கட்டிடத் தொழிலாளிகள் படும் அவலங்களுக்கு அளவே இல்லே... அப்படிப்பட்டவர்களுக்கு 27-9-85 அன்று மாலே நீலகிரி மாவட்டத்தையே கண்கலங்கும் அளவிற்கு சோகத்தை உருவாக்கி விட்டது. வெள்ளிக்கிழமை மாலே 3-55 மணிக்கு மனதில் திகில். ஒரே மரணஓலம். சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தால் ''மண்சரிந்து விட்டது; நம் கிராமத்தவர்கள் மண்ணுக்கடியில் சிக்கிக் கொண்டார்கள்'' என்ற செய்தி கேட்டு 70 அடிகளே தூரமுள்ள கட்டிட வேலே செய்யுமிடத்திற்கு ஓடிச் சென்று பார்த்தால்... மண்சுவரின் பெரும்பகுதி சுமார் 40 லாரிகள் அளவு கொண்ட மண்ணேச்சுற்றி அங்கு வேலே செய்யும் மற்றத் தொழிலாளர்கள் அழுது புரண்டு கொண்டும், கதறித்துடித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

அக்காட்சியைப் பார்த்த நாம் செய்வதறியாது திகைத்துப் போய் ஏதோ ஒரு வெறியில் மண்ணேக் கையால் பிராண்டுகிறோம். எந்த ஒரு கருவிகளும் இல்லே... மற்ற ஒரு சில நண்பர்கள் கையால் பெரிய பெரிய கட்டிகளேத் தூக்கிப் போட்டுக் கொண்டும், கைக்குக் கிடைத்த தகரம் போன்றவற்றால் மண்ணேப் பிராண்டிக் கொண்டிருக்கிறார்கள். சிறிது நேரத்தில் மண் தோண்டும் கருவிகள் வர ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டு மண்ணேத் தோண்டுகிறோம்.

மலேபோல் குவித்திருக்கும் ஈர மண்ணுக்கடியில் மனித உயிர்கள் பல... ஓரே கூட்டம்... செய்வதறியாது கதறுகிறது. பார்ப்பவர்களுக்கு இதயத்துடிப்பு அதிகரித்து சாகுமளவிற்குக் கோரக் காட்சி... சுமார் முக்கால் மணி நேரம் கழித்து பிறகு தீயணேப்புப்படையினர் வருகின்றனர். பிறகு கொஞ்ச நேரம் கழித்து ராணுவம் வருகிறது.

மண்ணேத் தோண்டுகிறார்கள். ஒருமணி நேரமாக யாரையும் கண்டுபிடிக்க முடியவில்லே. யார் யார் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பது தெரியாமல் வெறித்தனமாக உயிரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு இயங்கும் நண்பர்கள். கணவரையும், மகனேயும், மகளேயும், கண்ணெதிரே பறிகொடுத்து விட்டுக் கதறுபவர்களே அடித்து விரட்ட போலீஸ் படை.

சுமார் ஐந்தரை மணியளவில் ஒருவரின் தலேமட்டும் தெரிகிறது. முகமெல்லாம் ஒரே நுரை காதுகளில் ரத்தம்... முகம் நசுங்கி தெரிந்த அந்தக் காட்சி— ஐய்யோ...

தலேயைப் பார்த்தவர்களில் ஒருசில ராணுவத்தினர், இடத்தைவிட்டு நகர... மண் தோண்டிக் கொண்டிருந்தவர்களில் ஒரு சிலர் மயக்கமடைந்து விழ... கதறிக் கொண்டிருந்தவர்களில் சிலரும் மயக்கமடைந்து விழ ஒரே பரபரப்பு, கதறல். இந்நிலேயிலும், போலீஸின் மிரட்டல்... மண் தோண்டிக் கொண்டிருந்த நாம் அந்தக் காட்சியைக் கண்டு காண்ட்ராக்டரின் மேல் எரிச்சலடைந்து கேமராவிற்காக ஓடுகிறோம். அது கிராமமானதால் புதிதாகக் கட்டி முடித்த மாளிகைகளில் குடியிருக்கும் ராணுவ அதிகாரிகளிடம் கேமராவிற்காக ஓடுகிறோம்...

''No I don't have camera I'm Sorry''.

''இதர் கேமரா நையே ஜாவ் ஜாவ்''

''Now I am going out''

''I am verry Sorry'' போன்ற பதில்கள்...

மனக்குமுறலுடன் மீண்டும் வந்து மண்ணேத் தோண்டுகிறோம். சுமார் ஆறு மணியளவில் இங்கொன்றும் அங்கொன்றுமாக மனித உடல்கள் (உயிர்கள்) பலநிலேகளில். முகம் தெரிந்த உடன் கடைசி மூச்சை வெளியேற்றிவிட்டு அடங்கிப்போன உடல்களின் முகம் தெரிந்த பின்பும், வெகுநேரமாகி மண்ணுடன் போராடிய பிறகே உடல்களே மீட்க முடிந்த நிலே......

தோண்டும்போது தலேயிலும், கையிலும் மார்பிலும் மண்வெட்டியால் ஏற்பட்ட காயங்கள் வேறு. 16 பேரை மீட்ட பின்பு ஒருவாறாக சமாளித்துக் கொண்டு மலேயை விட்டுக் கீழிறங்கி இரவு 8 மணியளவில் கிராமத்திற்குவந்து பைசா சமாளித்துக் கொண்டு குன்னூர் சென்று தினச் செய்தியாளர்களிடம் விஷயத்தைச் சொன்னால் விபரத்தை முழுவதும் கேட்டுவிட்டு...

''அது கவர்மென்ட் நியூஸ். நாம் தலேயிட முடியாது சார்.''

''S.P. பர்மிஷன் இல்லாம ஏரியாவில் நுழைய முடியாது சார்.''

''அது டிபன்ஸ் ஏரியா. கலக்டர் பர்மிஷன் கூட செல்லாது, சார்...''

''அதுபாட்டுக்கு காலேலே ரேடியோவில் நியூஸ் வந்துடும். நீங்க ஏன் சார் அலட்டிக்கிறீங்க?''

இதுபோன்று நிருபர்களின் பதில்களேக் கேட்டும், சென்னேயில் ஒரு வாரப் பத்திரிகைக்கு

# ஊட்டி விபத்து பற்றி

# மாநில சங்கத்தின் நடவடிக்கை

ஊட்டியில் கட்டிடத் தொழிலாளர்கள் 11 பேர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தனர் என்ற செய்தி களை பத்திரிகைகளில் பார்த்தவுடன் நமது மாநில சங்கத்தின் முடிவிற்கு ஏற்ப நானும், திருவொற்றியூர் E. ராமன் அவர்களும் விவரங்களை அறிய ஊட்டி சென்றோம்.

ஊட்டிக்குச் செல்லுமுன் குன்னூர் என்ற நகராட்சி உள்ளது. இரவு குன்னூரை அடைந்து பலரை விசாரித்ததில் விபத்து வெலிங்டனைத் தாண்டி யுள்ள மிலிடரி பகுதியில் நடைபெற்றது என்றும், அனுமதிக்கமாட்டார்கள் என்றும் சொன்னார்கள்.

வெலிங்டனுக்கு காலையில் சென்றோம். கட்டிடத் தொழிலாளர்கள் வேலைக்குச் சென்று கொண்டிருந்தனர். விபத்து பற்றி விசாரித்தபோது ஒரு மைலில் உள்ள பாபுகிராமத்தில் அறிந்து கொள்ளலாம் எனக் கூறினர்.

பாபுகிராமத்தில் உள்ள இளைஞர்களை சந்தித்தபோது அந்தப் பகுதியைப் பற்றிய விவரங்கள் மற்றும் கட்டிடத் தொழில் நடைபெறும் விதம், விபத்து மற்றும் காண்டிராக்டரைப் பற்றி தெரிய வந்தது.

குன்னூரிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள வெலிங்டனில் ராணுவமுகாம் உள்ளது. இங்கு உள்ள கூர்க்கா ஹில்ஸ் என்ற மலையில் இந்தியாவில் உள்ள பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வரும் ராணுவ அதிகாரிகளுக்கு தனிப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

பாபுகிராமம் மற்றும் சுற்றி உள்ள கிராமங்கள் கன்டோன்மென்ட் பகுதியில் அடங்கியது. ராணுவ நிர்வாகத்திற்கு உட்பட்டவை. குடிநீர், விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கும் ராணுவ நிர்வாகத்தைத்தான் அணுகவேண்டும்.

ராணுவ முகாமில் உள்ள ஆயிரக்கணக்கான இராணுவ அதிகாரிகளின் குடும்பங்களுக்கு வீடு கட்டுவதும், மலைப்பகுதியில் சாலைகளை அமைக்கவும், ரிவெட்மெண்ட் செய்வதும் கட்டிடத் தொழிலாளர்களின் வேலை. இந்தப் பகுதியில் பெரும்பாலான கட்டிட வேலைகளை சூரி என்கிற காண்டிராக்டர் தான் செய்து வருகிறார்.

மண்ணுக்கடியில் பதினோரு தொழிலாளர் மாய்ந்து போன செய்தி பத்திரிகைகளில் வந்ததே பெரிய விஷயம்தான். ஏனெனில் இதற்கு முன் கட்டிடத் தொழிலாளர்கள் இவரிடம் வேலை செய்யும் போது பல விபத்துக்கள் நடந்துள்ளன. அடிபட்டு ஊனமானவர்கள் பலர். ஆனால் இவர்களுக்கு இதுவரை எந்தவித பாதுகாப்பும், நஷ்டஈடும் கொடுத்தது கிடையாது. பாதுகாப்பற்ற முறையில் ரிவெட்டிங் நடைபெறுகிறது. நீண்ட நேர வேலைக்கு குறைந்த கூலி கொடுத்து வருகிறார். குழந்தைகளையும் வேலைக்கு அமர்த்தி ரத்தத்தை உறிஞ்சுபவர் இந்த சூரி. ராணுவப் பகுதி என்பதால் இங்கு நடக்கும் அநீதிகள் மூடி மறைக்கப்படுகின்றன.

இந்த முறை நடந்த விபத்தில் 11 பேர் இறந்தனர் என்றும் 3 பேர் காயமுற்று மருத்துவமனையில் இருந்தனர் எனத் தெரிய வந்தது.

"விபத்து நடந்தவுடனே நஷ்டஈடு கேட்ட போது டி எஸ்.பி., எஸ்.பி. எல்லோரும் வந்து மிரட்டினார்கள். நஷ்டஈட்டுக்கு சட்டரீதியான உரிமை இருப்பது எங்களுக்குத் தெரியாது'' என கூறினார்கள்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களை சந்தித்து ஆறுதல் கூறியதுடன் சட்ட ரீதியான உரிமைகள் பற்றி எடுத்துக் கூறினோம். நஷ்டஈடு பற்றி நடவடிக்கை எடுக்க மனுக்களைக் கொடுத்தனர் குன்னூரில் உள்ள திரு. ஜோகன் என்கிற வழக்குரைஞரை சந்தித்தோம்.

இரவில் மூன்று ஊர்களைச் சேர்ந்த மக்களும் கூடிய கூட்டத்தில் கட்டிடத் தொழிலாளர்களின் நிலை, சட்டரீதியான உரிமைகள், விபத்து சம்பந்தமான நடவடிக்கை, முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ரூ 10,000 பெறுவதற்கான உரிமை, தொழிலாளர் நஷ்டஈட்டு சட்டத்தின்படி நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி பேசினோம். நீண்ட விவாதம் நடைபெற்றது. மாநிலசங்கம் தொடர்ந்து உதவியும், ஆலோசனையும் தரவேண்டினர். இளைஞர்கள் பிரேத பரிசோதனை அறிக்கைகள், மருத்துவமனை சீட்டுகள் பெற்று நஷ்டஈடு பெறுவதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதாக மிக்க ஆர்வத்துடன் கூறினர். சட்ட உதவிக் கழகத்தின் உதவியுடன் வழக்குகள் நடைபெறுகின்றன.

—எம். சுப்பு,

பொதுச் செயலாளர்

## நினைவு கொள்வோம்!

தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கச் செயற்குழு உறுப்பினர் திரு. கந்தசாமி சேர்வை அவர்கள் சங்கத்தின் லட்சியங்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு பல்வேறு போராட்டங்களில் சிறை சென்றவர். எல்லோரிடத்திலும் குழந்தை உள்ளத்தோடு பழகிய நற்பண்பாளர். அன்னாரின் பிரிவு கட்டிட தொழிலாளர்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரை பிரிந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு நாம் நமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

# மாநில செயற்குழு கூட்டம்

தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் மாநிலத் தலைவர் திண்டுக்கல் வி. பிச்சைமுத்து அவர்களின் தலைமையில் 16-2-86 அன்று காலை 11 மணி முதல் மாலை 7 மணி வரை சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் அனைத்து மாவட்ட பிரதிநிதிகளும், மாநில செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர், செயற்குழு கீழ்கண்ட தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றியது.

1. டெல்லியில் நடந்த அகில இந்திய தேசியக் கருத்தரங்கின் தீர்மானங்களை ஆராய்ந்த பின்னர், முடிவுகளை முழுமையாக ஏற்றுச் செயல்படுவது என்று ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

2. டெல்லியில் நடந்த தேசியக் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட முடிவுகளையே மத்திய அரசின் முத்தரப்புக் கமிட்டியில் வலியுறுத்தி ஏற்றுக் கொள்ளச் செய்வதென்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

3. தேசிய இயக்கம் உருவாக்கியுள்ள மசோதாவை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வலியுறுத்துவதென்றும், அதற்கான மனுவில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் 10 லட்சம் கையெழுத்துக்கள் வாங்குவதென்றும், 1986-ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் டெல்லியில் ஒரு மாபெரும் பேரணி நடத்தி மசோதாவை பாராளுமன்றத்திற்குக் கொடுப்பது என்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

4. விபத்தில் இறந்த கட்டிடத் தொழிலாளர்களுக்கு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10 ஆயிரம் கொடுக்க தமிழக அரசு ஆணை பிறப்பித்தும், அறிவித்த ஆணைப்படி இதுவரை விபத்தில் இறந்த கட்டிடத் தொழிலாளர்களுக்கு ரூ. 10 ஆயிரம் வழங்கப்படாததைத் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், அரசு தரப்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. அரசு ஆணையை அமுல்படுத்தக் கோரி ஏப்ரல் மாதம் அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பும், வட்டாட்சியாளர் அலுவலம் முன்பும் ஒரு நாள் உண்ணாவிரதம் இருப்பது என்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

5. டெல்லியில் நடந்த தேசிய கருத்தரங்கத்தின் செலவிற்காக ரூ. 15 ஆயிரமும், தமிழகத்தில் 5 மாவட்டங்களில் சட்டக் கல்வி முகாம்கள் நடத்துவதற்காக ரூ. 20 ஆயிரமும் கொடுத்துள்ள மத்திய அரசின் சட்ட அமைச்சகம் மற்றும் சட்ட உதவித் திட்டங்களை அமுல் நடத்தும் (CILAS) குழுவிற்கும் இச் செயற்குழு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

6. மார்ச் மாதம் 1, 2 தேதிகளில் மதுரை.
8, 9 தேதிகளில் சேலம்,
15, 16 தேதிகளில் விருதுநகர்,
22, 23 தேதிகளில் மயிலாடுதுறை,
29, 30 தேதிகளில் சென்னை,

ஆகிய இடங்களில் சட்டக் கல்வி முகாம்களை நடத்துவது என்றும், தமிழக சட்ட உதவிக் கழகப் பொறுப்பாளர்களை அழைப்பது என்றும், முகாமை நடத்துவதற்கு மாவட்டவாரியாக அமைப்புக் குழுக்களை நியமிக்க நிர்வாகக் குழுவிற்கு அதிகாரம் அளிப்பது என்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

7. வரும் ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்குள் 1986-ம் ஆண்டுக்கான உறுப்பினர்களைச் சேர்த்தல், மற்றும் உறுப்பினர்களைப் புதுப்பித்தல், புதிய கிளைகளைத் துவக்குதல் போன்ற இயக்கப் பணிகளைத் துரிதப்படுத்துவது என்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது-

வெளியிடுபவர்: V. பிச்சைமுத்து
14, மண்டபம் குறுக்குத்தெரு கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
ஆசிரியர் எம், சுப்பு
அச்சிட்டோர்; மக்கள் அச்சகம் சென்னை-600 002,